செ.வெ.எண்-39 நாள்-21.02.2018

**அரியலூர் மாவட்டத்தில் உணவு வணிக கடைகள், வணிகர்கள், உணவு பாதுகாப்புத்துறை உரிமம், பதிவு பெறவேண்டும், தவறினால் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய சட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்க்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

அரியலூர் மாவட்டத்தில் உணவு வணிகம் செய்யும் தனியார் உணவு வணிகர்கள், அரசு சார்ந்த உணவு வணிக மையங்கள் அனைத்தும் உணவு பாதுகாப்பு துறையில் உரிமம் மற்றும் பதிவு பெற்றிட வேண்டும் உரிமம் பதிவு பெறாத உணவு வணிக கடைகள் மீது உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய சட்டம் 2006-ன்படி வழக்கு தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் பிரிவு 31-ன்படி உணவு வணிகர்கள் உரிமம் மற்றும் பதிவு செய்ய வேண்டியது கட்டமாயமாக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள பெட்டி கடைகள், பீடா ஸ்டால்கள், மளிகை கடைகள், ஏஜென்சிகள், உணவு தயாரிப்பு நிறுவனங்கள், குடிநீர் தயாரிப்பு நிலையங்கள், விற்பனை மையங்கள், திருமண மண்டபங்கள், ஹோட்டல்கள், தொழில் முறையாக உணவு சமைப்பவர்கள், சமையல் கூடங்கள் அனைத்தும் உரிமம், பதிவு பெற்றிருக்க வேண்டும். விற்று கொள்முதல் ரூ.12 இலட்சத்திற்குள்ளாக உள்ளவர்கள் ரூ.100/-ம் செலுத்தி பதிவும் அதற்கு மேலாக உள்ளவர்கள் ரூ.2000/-மும் செலுத்தி உரிமம் பெற வேண்டும்.

பெறக்கூடிய வழிகள் உணவு பாதுகாப்பு உரிமம் மாவட்ட நியமன அலுவலர் அலுவலகம், உணவு பாதுகாப்பு துறை, 2வது தளம், பல்துறை வளாகம், ஜெயங்கொண்டம் ரோடு, அரியலூர் என்ற முகவரியிலும் 04329- 223576 உணவு பாதுகாப்பு பதிவு அந்தந்த வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர்கள் மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

செலுத்துச்சீட்டு மூலம் மாவட்டத்தில் உள்ள கருவூலக வங்கிகள் மூலமாகவும், CSC (e-பொது சேவை மையங்கள்) மூலமாகவும், டெபிட் கார்டு, கிரிடிட் கார்டு மற்றும் இணையதள வங்கி சேவை www.foodlicensing.fssai.gov.in எனும் இணையதளம் மூலமாகவும் செலுத்தியும் உரிமம், பதிவு பெறலாம்.

மேலும் பொதுமக்கள் கவனத்திற்கு, தாங்கள் வாங்கும் உணவு பொருட்களில் உணவு பொருட்கள் தொடர்பான முழு முகவரி மற்றும் FSSA LIC உரிமம்/பதிவு எண் இல்லை என்றாலும் கடைகளில் உரிமம், பதிவு இல்லையென்றாலும், உணவு பொருட்களின் தரம் குறைவாகவோ அல்லது ஏதெனும் குறைபாடுகள் கண்டறியப்படடால் 9444042322 என்ற வாட்ஸ்ஆப் எண்ணில் குறுஞ்செய்தி, வாய்ஸ் மெசேஜ், போன்கால் மூலமாக தொடர்பு கொண்டும் புகார் தெரிவிக்கலாம் புகார் பெறப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளாக உணவு பாதுகாப்பு துறை அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு புகார்தாரருக்கு பதில் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**